INNOV SERVICES



# இசைக்கவி ரமணன்

## தமிழ் கவிஞன்

என்னைப் பற்றி….

**பிறப்பு** : மார்ச் 30, 1954, திருநெல்வேலி

**பெயர்** : த.அ. வெங்கடேச்வரன் / ரமணன். இரண்டுமே பெற்றோர் வைத்த பெயர்கள். நிறைய ரமணன்கள் இருப்பதால், பல குழப்பங்கள் நேர்ந்ததால், ஒரு நண்பன் தந்த இசைக்கவி என்னும் அடைமொழியைச் சேர்த்து இசைக்கவி ரமணன் என்று அழைத்துக்கொள்கிறேன், அழைக்கப் படுகிறேன்

**கல்வி** : வணிகவியல் பட்டதாரி (1973)

**என் ஒரே அடையாளம்** : தமிழ்க் கவிஞன்.

**பணி**

`தி ஹிண்டு` நாளிதழில் 27 ஆண்டுகள். சென்னை, பெங்களூரு, மதுரைக் கிளைகளில் பணியாற்றி, பதவி உயர்வு பெற்று விசாகப்பட்டினத்தில் வட்டார மேலாளராகப் பணிபுரிந்து, பல சிறப்புகள், பாராட்டுக்கள் பெற்று, ஓய்வுபெற இன்னும் பத்து ஆண்டுகள் இருந்தபோது (2005) வேலையை உதற வைத்தது சிறுவயது முதலே பிடரியைப் பிடித்துக் கொண்ட ஆன்மிகப் பித்து.

**குடும்பம்**

அன்பு மனைவி அனுராதா, இரட்டை மகன்கள் ஆனந்த் – ப்ரியா, விக்ரம் – தீப்தி

## <u>நூல்கள்</u>

**கவிதை நூல்கள்:**

1. கோடுகள் இல்லா உலகம்
2. ரமணனைக் கேளுங்கள் (பாடல்கள் அடங்கிய குறுந்தகடும்)

**கட்டுரை நூல்கள்:**

1. எல்லோர்க்கும் தந்தை இறைவன்
2. திருமணம் என்பது…

**சுயமுன்னேற்ற நூல்கள்:**

1. எந்த வானமும் உயரமில்லை
2. Chips Down? Chin Up!

**மொழிபெயர்ப்பு:**

1. Planet Boomerang (பூமரேங் பூமி – கபிலன் வைரமுத்து)

2. துர்கா சப்த ஸ்லோகி (வடமொழியிலிருந்து ஆங்கிலம், தமிழ், தந்தையாரின் தமிழ் விளக்கவுரையுடன்)

**சிறப்பு நூல்கள்:**

1. **'சிகரம்'** : இயக்குனர் சிகரம் திரு. கே. பாலசந்தர் அவர்களின் வாழ்க்கை வரலாறு
2. **Mahamantras of Mahalingam: The business methodologies of Dr. N. Mahalingam, a coffee table book published by Times of India, in association with the Indian Chamber of Commerce and Industry, Coimbatore**

**குறுந்தகடுகள்:**

1. ஒவ்வொரு படியும் சிகரம்தான் (வாழ்வியல் பாடல்கள்- கோவை வெற்றி வாசல் வெளியீடு)
2. **ஆத்தி சூடி** (தர்மா ராமனுடன் ஆங்கிலம் – தமிழ் உரையாடல்)

**பயணங்கள்:**

- ஓர் எளிய யாத்ரியாக 30 முறை இமயமலைப் பயணம் (ஜாகேஷ்வர், பத்ரி, கேதார், ஹிமாசல், லடாக், அருணாசல், திருக்கயிலை, அமர்நாத்) தனிமை கண்டதுண்டு…

**<u>தொலைக்காட்சியில் பங்களிப்பு:</u>**

**தற்போது பங்குகொள்ளும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

- **சங்கரா தொலைக்காட்சி:** ஒவ்வொரு நாளும் காலை 5.45 மணிக்கு, "காஞ்சி மகான்" என்ற தலைப்பில் பேசுகிறேன்
- **மக்கள் தொலைக்காட்சி** : சனி/ஞாயிறு காலை 6.30 மணிக்கு. "தமிழ் அமிழ்து" நிகழ்ச்சியை வழங்குகிறேன்

**இதுவரை பங்குகொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

- **பொதிகை தொலைக்காட்சி:** `**கொஞ்சம் கவிதை கொஞ்சம் தேநீர்**` நிகழ்ச்சியில் பங்குகொண்டேன்.
- **ஜெயா டிவி** : காலை மலர் சிறப்புப் பேட்டி
- **பாலிமர் சேட்டிலைட் சானல்** : உனக்குள் ஒருவன் என்னும் நிகழ்ச்சியில் எட்டு முறை சுயமுன்னேற்றச் சுருக்கச் சொற்பொழிவுகள்/பாடல்கள்

**சொற்பொழிவுகள்:**

- கோவையில் மில்களில் வேலை செய்யும் பெண்களுக்கும், வளரும் சிகரங்கள் அமைப்பின் சார்பில் குழந்தைகளுக்கும்,

வெற்றி வாசல் நிகழ்ச்சியில் இளைஞர்களுக்கும் சுய முன்னேற்றச் சொற்பொழிவுகள்

- சென்னை ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத்தின் பணியாளர்களுக்காக சுயமுன்னேற்றத் தொடர்நிகழ்ச்சிகள்

**தற்போதைய தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சிகள்**

- "தேவியும் மனிதனும்" ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்வழங்கும் தொடர் நிகழ்ச்சியில், மாதம் ஒரு முறை, தசமஹா வித்யாவைப் பற்றிப் பேசுகிறேன்
- வியாசர்பாடியில் மாதம் ஒரு முறை, அம்பிகையின் அழகு, பாரதியார் போன்ற வெவ்வேறு தலைப்புகளில் பேசிவருகிறேன்

**<u>நடிப்பு</u>**

- இயக்குனர் சிகரம் திரு. கே. பாலசந்தரின் இயக்கத்தில், கலைஞர் தொலைக்காட்சியில், 'அமுதா ஓர் ஆச்சர்யக்குறி' நெடுந்தொடரில் நடித்தேன்
- சன் தொலைக்காட்சியில், ரம்யா கிருஷ்ணனுடன் 'ராஜகுமாரி' நெடுந்தொடரில் நடித்தேன்

**<u>விருதுகள் சில…</u>**

- **ஸ்ரீராம் குழுமத்தின்** விருது
- **ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்**நிறுவனம் வழங்கிய **தமிழ்ச்சுடர்**
- **சென்னை கம்பன் கழகம்** வழங்கிய க.கு. கோதண்டராமன் நினைவுப் பரிசில்
- **பாரதி இலக்கியச் செல்வர்**